இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

இயேசு கூறியது: "நல்ல ஆயன் நானே. நல்ல ஆயர் ஆடுகளுக்காகத் தம் உயிரைக் கொடுப்பார். கூலிக்கு மேய்ப்பவர் ஓநாய் வருவதைக் கண்டு ஆடுகளை விட்டுவிட்டு ஓடிப்போவார். ஏனெனில் அவர் ஆயரும் அல்ல;ஆடுகள் அவருக்குச் சொந்தமும் அல்ல. ஓநாய் ஆடுகளைப் பற்றி இழுத்துக் கொண்டுபோய் மந்தையைச் சிதறடிக்கும். கூலிக்கு மேய்ப்பவருக்கு ஆடுகளைப்பற்றிக் கவலை இல்லை. (யோவான் :11-13)

# இறையழைத்தல், கடவுள் அருள் மாபெரும் கொடை

## இறையழைத்தல் ஞாயிறுக்கென்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் வெளியிட்டுள்ள செய்தியின் சுருக்கம்

வத்திக்கான்: அன்பார்ந்த சகோதர சகோதரிகளே, அகில உலக திருஅவையின் பாதுகாவலராக புனித யோசேப்பு பிரகடணப்படுத்தப்பட்டதன் 150-ம் ஆண்டு நிறைவை முன்னிட்டு, 8 டிசம்பர் 2020 தொடங்கி அடுத்து வரும் ஆண்டை அவருக்காக அர்ப்பணம் செய்யப்பட்ட ஆண்டாக அறிவிக்கப்பட்டது. எனது பங்காக, Patris Corde எனும் திருத்தூது மடலை, "இந்த புனிதர் மீது நமது அன்பை ஆழப்படுத்தும்" நோக்கத்தில் வரைந்தேன். இவர் அரும்பெரும் செயல்களைச் செய்யவில்லை; இவருக்குத் தனித்து வமிக்கக் கொடைகள் ஏதேனும் இருந்த தாகவும் தெரியவில்லை; இவர் நேர்மையானவர் என்ற ஒரு சிறப்பு பண்பைத் தவிர வேறு எதுவும் நற்செய்திகளில் குறிப்பிடப்படவில்லை. ஆனாலும், தனது சாதாரண வாழ்க்கையின் மூலம், கடவுளின் பார்வையில் அரிய பணியைச் செய்தார்.

ஒவ்வொரு கனவுக்கும் பிறகு, யோசேப்பு தனது திட்டங்களை மாற்றிக்கொண்டு சவால் மிக்க முடிவை எடுக்க வேண்டியிருந்தது, கடவுளின் மறைபொரு ளான திட்டங்களைப் பின்பற்றுவதற்காக தனது சொந்த திட்டங்களை தியாகம் செய்தார், அவர் கடவுளின் திட்டத்தை முழுமையாக நம்பினார். ஏனென்றால், அவருடைய இதயம் கடவுளிடம் தஞ்சம் கொண்டிருந்தது, அவரைச் சார்ந் திருந்தது.

இது நம்முடைய இறைழழைப்பிற்கும் பொருந்தும்: கடவுள் நமது சுதந்திரத்திற்கு மதிப்பளிக்கிறார். அவர் தனது திட்டங்களை மென்மையாக நமக்குத் தெரிவிக்கிறார். அவர் திகைப்பூட்டும் தரிசனங்களால் நம்மை ஆட்கொள்வதில்லை. ஆனால் அமைதியாக நம் இதயத்தின் ஆழத்தில் பேசுகிறார். நமக்கு அருகில் வந்து நம் எண்ணங்கள் மற்றும் உணர்வுகள் மூலம் நம்மிடம் பேசுகிறார்.

புனித யோசேப்பு, நான்கு கனவுகளில் முதலாவது கனவு, மரியாவை ஏற்றுக் கொண்டதனால் மீட்பருக்குத் (இயேசு



வுக்கு) தந்தையாக மாறியது, இரண்டாவது, கனவில் எச்சரிக்கப்பட்டதனால் எகிப்திற்கு தப்பித்துச் செல்லுதல், எனவேதான் நாம் அவரைக் குடும்பத்தைப் பாதுகாக்கும் பொறுப்பாளராகப் பார்க்கின்றோம். மூன்றாவது, சொந்த ஊருக்குக் குழந்தையையும், தாயையையும் கூட்டிக் கொண்டு செல்லப் பணித்ததனால், அதை நிறைவேற்ற முனைப்புடன் செயல்பட்டது, நான்காவது அவரது சொந்த திட்டத்தை இறைவன் மாற்றியமைத்த பொழுதும், அதை ஏற்றுக்கொண்டு குழந்தை இயேசு வையும், மரியாளையும் நாசரேத்துக்கு மீண்டும் கூட்டிவந்தது.

கடவுளின் திட்டத்தை அவர் தீவிரமாக ஏற்றுக்கொண்டார்: ஒருபோதும் தயக்கம் காட்டவில்லை யோசேப்பு நிச்சயமாக நம்பிக்கையற்ற தன்மையில் அவர் கடவுளின் திட்டத்தையும் அழைப்பையும் புறந்தள்ளாமல், தைரியமாகவும் உறுதியாகவும் செயல்பட்டார். கடவுளின் கனவுகளை நனவாக்க அனைவருக்கும், குறிப்பாக விவேகமுள்ள இளைஞர்களுக்கு அவர் உதவுவாராக. ஒருபோதும் கைவிடாத கடவுளிடம் “ஆம்" என்று சொல்லும் தைரியத்தை அவர் அவர்களில் ஊக்குவிப்பாராக.

நான் உறுதியாக நம்புகிறேன், இயேசுவுக்கும் திருஅவைக்கும் பாதுகாவ லராக விளங்கும் புனித யோசேப்பு, இறையழைத்தலுக்கும் பாதுகாவலராகத் திகழ்கிறார்.

புனித யோசேப்பு இறையழைத்தலுக்கான தனது பணியில் நம்பகத்தன்மையைக் கொண்டிருந்தார். அவர் நேர்மையாளர் (மத்12:19) அவர் பொறுமையாக கடவுளின் அழைப்பை சிந்தித்து முடிவெடுத்தார். வாழ்க்கையில் வெற்றி என்பது முக்கியமான முடிவுகளுக்கு நிலையான நம்பகத்தன் மையின் அடிப்படையில் அமைகிறது என்பதை அவர் அறிந்திருந்தார். இறையழைத்தல் என்பது அன்றாட நம்பகத்தன்மையில் வெளிப்படுகிறது.

நம்பகத்தன்மை மகிழ்ச்சியின் இரகசியம், எளிமையின் மகிழ்ச்சி. அன்புள்ள சகோதர சகோதரிகளே பிறருக்கான சேவையை ஏற்க விரும்பும் உங்களது கனவை கடவுள் நிறைவாக ஆசீர்வதித்து, அதே நம்பிக்கையை நீங்கள் அனுபவிக்க அவர் அருள்புரிய வேண்டுமென்று நான் இறைஞ்சுகிறேன். புனித யோசேப்பு, அவரது தந்தை உள்ளத்தோடு உங்களுக்கான இறையழைத்தல் நனவாக உங்களோடு பயணிப்பாராக.

திருத்தந்தை பிரான்சிஸ்.
புனித யோசேப்பு திருவிழா 21 மார்ச் 2021
.

# ‘கனிதரும் சீடத்துவம்’ உருவாக்கப் பயிற்சியில் திருவழிபாடு

பினாங்கு: தீபகற்ப மலேசிய திருஅவையின் பொதுநிலையினரின் மேம்பாட்டுக்காக செயல்பட்டுவரும் ‘கனிதரும் சீடத்துவம்’ தனது ஒரு வருட தொடர் பயிற்சியில் பொதுநிலையினரை ஊக்குவித்து வருகிறது. இதன் ஒரு அங்கமாக இந்த மாதம் ஏப்ரல் 11 மற்றும் 18ம் தேதிகளில் இதன் ஆன்மீக ஆலோசகர் பேரருட் தந்தை ஹென்றி ராஜூ, கூலிம் இருதய ஆண்டவர் ஆலய பங்கு தந்தை அவர்கள் ‘திருவழிபாடு’ எனும் தலைப்பில் சொற்பொழிவாற்றினார்..

இயங்கலை வாயிலாக 18-04-2021, ஞாயிற்றுக்கிழமை இரவு 8 மணி முதல் 10 மணி வரை நடைபெற்ற தீபகற்ப மலேசிய திருஅவையின் பொதுநிலையினரில் ஏறக்குறைய 70 பேர் பங்கு பெற்றனர். இப்பயிற்சியில் கத்தோலிக்கத் திருஅவையின் திருவழிபாட்டின் வரலாற்றை, குறிப்பாக, அதன் மலர்ச்சியின் காலம், தளர்ச்சியின் காலம் மற்றும் மறுமலர்ச்சியின் காலம் தொட்டு அருள்தந்தை தெளிவாக விளக்கமளித்தார். மேலும், திருவழிபாட்டில் பொது நிலையினரின் மற்றும் அருள்தந்தையர்களின் பங்கெடுப்பையும் தந்தை அவர்கள் மிகவும் தெளிவாக எடுத்துரைத்தார்.

மேலும் இரண்டாம் வத்திக்கான் சங்கத்திற்கு முந்திய, பிந்தியக் காலங்களில் திருஅவை திருவழிபாட்டில் கண்ட மாற்றங்களைக்,. குறிப்பாக இரண்டாம் வத்திக்கான் சங்கம் உணர்த்திய முக்கிய படிப்பினையான, திருவழிபாட்டில் இயேசுவே மையம், என்பதும் திருவழிபாட்டுக் கொண்டாட்டத்திற்கு ஆயர் அல்லது அருள்பணியாளர் தேவை என்பதும், பொதுநிலையினரின் ஈடுபாடு இன்றியமையாததுஎனும் உண்மை நிலையும்,

-தொடர்ச்சி, அடுத்தப் பக்கம்



Msgr ஹென்றி ராஜூ அவர்கள்

# பொது நிலையினருக்கு 'திருவழிபாடு' பயிற்சி

*முன் பக்கத் தொடர்ச்சி.*

இறுதியாக, கிறிஸ்தவ வாழ்வுக்கு நற்கருணை உச்சமும் ஊற்றாகவும் விளங்குகிறது என்பதையும் வலியுறுத் தினார். இதில் கலந்துகொண்ட பொதுநிலையினர் திருவழிபாடு, தலைமைத்துவ உருவாக்கும் முயற்சியில் எவ்வாறு ஈடுபடுகிறது என்பதையும் பொதுநிலையினர் அதில் எவ்வாறு பங்கேற்கலாம் என்பதையும், திருஅவை நமக்கு கொடுத்திருக்கும் அனைத்து முன்னுரிமைகளையும், சிறப்பு நற்கருணை பணியாளர்கள் உட்பட தெளிவாக வலியுறுத்தினார். நடைபெற்ற இரண்டு உருவாக்கப்பயிற்சிகளிலும், திருவழிபாடு கொண்டிருக்கும் சாரம்சங்கள் சிறப்பாகத் தெளிவுப்படுத்தப்பட்டன.

பங்கேற்றவர்களின் கேள்விகளுக்கும் சந்தே கங்களுக்கும் விளக்கமளித்த அருள்தந்தை திருவழிபாடு என்பது வெறும் திருப்பலி தயாரிப்புப் பணியை மட்டும் மையமாகக் கொண்டதல்ல, மாறாக, அவரவர் வாழ்வை உட்படுத்தியது என்று விளக்கினார்.

'கனிதரும் சீடத்துவம்' செயற்குழுவினர் சிரமம் பாராது, அழைப்பை ஏற்று சொற் பொழிவாற்றிய அருள்தந்தைக்கு மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொண்டனர்.

*-த. ஜோசப் சகாய ஆனந்த், மலாக்கா.*

# மறையுடலைக் கட்டியெழுப்பும் தம்பதியர்

"'மகிழ்வும் எதிர்நோக்கும்' (Gaudium et spes) என்ற அருள்பணி கொள்கை விளக்கத்தின் வழியே, 'திருமணம் மற்றும் குடும்பத்தின் மாண்பை மேன்மைப்படுத் துவதில்' 2-ம் வத்திக்கான் பொதுச் சங்கம் அக்கறை காட்டியது (எண்கள் 47-52). திருமணம் மற்றும் குடும்ப வாழ்வு, அன்பு என்ற அடித்தளத்தைக் கொண்டது (48).

கணவன்-மனைவி இடையே நிலவும் அன்பு, இறைத்திட்டத்திற்கு ஏற்ப, ஒருவருக்கொருவர் தங்களையே கொடையாக வழங்குவதில் அடங் கியுள்ளது. திருமணம் என்ற அருளடையாளத்தின் வழியே, கிறிஸ்து, தம்பதியருடன் தங்கியிருக்கிறார்.அவர், மனுவுருவெடுத்ததன் வழியே, மனித அன்பை தூய்மையாக்கி, அதை, நிறைவுக்குக் கொணர்கிறார்.

இந்த அன்பு, நம்பிக்கை, எதிர்நோக்கு, பிறரன்பு ஆகியவற்றால் நிறைந்த தம்பதியரின் வாழ்வை ஊடுருவிச் செல்கிறது. இவ்வகையில், கிறிஸ்துவின் மறையுடலைக் கட்டியெழுப்புவதற்கு, தம்பதியர் அழைக்கப்பட்டுள்ளனர்." (அன்பின் மகிழ்வு 67)

# 'குடும்ப நலனில் பெற்றோர் கடமை' குடும்ப வாழ்வு பணிக்குழுவின் சிறப்புப் பகிர்வு

**கோலாலம்பூர்**: கடந்த 17-04-2021-ல், கோலாலம்பூர் மாமறைமாவட்ட குடும்ப வாழ்வு ஆணையம், தமிழில், 'குடும்பத்தில் எதிர்நோக்கில் எழுச்சியுறுவோம்' என்ற தலைப்பில் குடும்ப வாழ்வில் பன்முக தன்மையை ஆதரிக்கும் நோக்கத்தில் மெய்நிகர் பகிர்வு ஒன்றை நடத்தியது. இமானுவேல் இரத்தினம் சிந்தியா வர்கசி தம்பதியினர் இந்த நிகழ்வில் ஒருங்கிணைப் பாளராகப் பொறுப்பேற்றனர். இதன் ஆய்வுப் பேச்சாளர்களாகக் கப்புசின் துறவற சபையைச் சார்ந்த அருள்தந்தை ஜோன் சின்னப்பன் ஆனந்தன் அவர்களும், பெர்சியுஸ் ஜேம்ஸ் எனி தம்பதியினரும் பங்கேற்றனர்.

சமூகங்களுக்கிடையில் எதிர்நோக்கை




இழந்து வரும் இன்றைய சூழல் குறித்து படைப்பாளர்கள் தங்களது வாழ்க்கையில், ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை எதிர்நோக்கி இருந்த அனுபவங்களைப் பகிர்ந்துக் கொண்டனர். பல சூழ்நிலை களில் எதிர்நோக்கில் சந்தேகம் எழுந்துள்ள வேளையிலும், இறைவன் மீது இருந்த அசைக்கமுடியா நம்பிக்கையின் வழி அச்சூழலை எதிர்கொண்ட அனுபவங் களைச் சுமார் ஒரு மணி நேரத்திற்குள் பகிர்ந்துக்கொண்டனர்.

மறைதிரு ஜோன் ஆனந்தன் அவர்கள், பொதுவாக நமது சமூகத்திலும், குடும்பத் திலும் எதிர்நோக்கு கொண்டிருப்பதன் பொருள் என்னவென்று ஆழமாக விளக்கினார். சமூகம் குடும்பம் ஆகியவற் றில் ஏற்படும் போராட்டங்களைச் சந்திக்கும் வேளையில், கடவுளுடைய அன்பு நன்மைத்தனங்களைக் கேள்விகள் கேட்கும் போதும், கடவுளைப்பற்றிய சந்தேகங்கள் எழும்போதும் பயம் நம்மை ஆட்கொண்டுள்ளதா என ஒவ்வொரு சூழலையும் எதிர்நோக்கு வழி கடந்து வர விளக்கம் அளித்தார். குழந்தைகளின் விசுவாச வளர்ப்பில் பெற்றோர்களின் பங்கு மிகப் பெரியது எனவும் சுட்டிக்காட்டினார்.

பெர்சியுஸ் எனி தம்பதியினர் தங்களுடைய பகிர்தலின் போது, இறைவேண்டலில் முக்கியத்துவம், குடும்பத்தில் இறை வார்த்தை ஆகியற்றை குழந்தைகள் சிறுவர்கள் மத்தியில் ஊக்குவிப்பதை வலியுறுத்தினர். மேலும், கனவன் மனைவி இருவரும் இறைவன் கொடுத்த வாக்குறுதி களைப் பிடித்துக்கொண்டு, குடும்பத்தில் எதிர்நோக்கிய சவால்களைக் கடந்து வந்த அனுபவங்களையும் வெளிப்படுத்தினர்.

ஒருங்கிணாப்பாளர் இமானுவேலும் அவரது அனுபவங்களைப் பகிர்ந்துக் கொண்டார். இறைவனில் நாம் அசையா நம்பிக்கைக் கொள்ளும் போது, நமது வழிகளில் வரும் எவ்வித சவால்களையும் எதிர்கொள்ளும் வலிமையை நாம் பெற்றுக் கொள்வோம் என உறுதியாகக் கூறினார்.

மேற்கண்ட பகிரவு கிடைக்கும் தளம். https://youtu.be/kBccfguBrX0

*-ஜோசுவா வினோத் பாலகிரிஸ்ணன்*

# மே மாதம் முழுவதும், உலகத் திருத்தலங்களில் செபமாலை

உலகெங்கும் பரவியுள்ள கோவிட்-19 பெருந்தொற்று முடிவுக்கு வரவேண்டும் என்ற வேண்டுதலுடன், வருகிற மே மாதம் முழுவதும், உலகின் அனைத்து திருத்தலங் களிலும், செபமாலை பக்தி முயற்சி மேற்கொள்ளப்படும் என்று புதியவழி நற்செய்தி அறிவிப்புப்பணி திருப்பீட அவை அறிவித்துள்ளது.

"திருஅவை முழுவதிலுமிருந்து இறைவனை நோக்கி இடைவிடாத செபம் எழுந்தது" என்ற தலைப்பில் நடைபெறும் இந்த உலகளாவிய முயற்சியை, மே மாதம் முதல் நாள், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் துவக்கிவைப்பார் என்றும், மே மாதம் 31-ம் தேதி, இந்த பக்தி முயற்சியை அவர் நிறைவு செய்துவைப்பார் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அன்னை மரியாவுக்காகவும், செபமாலைக் கெனவும் அர்ப்பணிக்கப்பட்ட மே மாதத்தில், இந்த பெருந்தொற்றை இறைவன் முடிவுக்குக் கொணரவேண்டும் என்ற சிறப்பு வேண்டுதலுடன், அன்னை மரியாவின் பரிந்துரையை நாடி, இந்த முயற்சி, உலகெங்கிலும் உள்ள திருத் தலங்களில் மேற்கொள்ளப்படும்.

ஒவ்வொரு நாளும், உரோம் நேரம் மாலை 6 மணிக்கு நடைபெறவிருக்கும் இந்த பக்தி முயற்சி, திருப்பீடத்தின் அதிகாரப் பூர்வமான அலைவரிசைகளின் வழியே, நேரடி ஒளிபரப்பு செய்யப்படும்.

*- ஜெரோம் லூயிஸ் - வத்திக்கான் செய்திகள்*

# மந்தையைக் காக்கும் நல்லாயன் பணியேற்போம்

இன்றைய பாஸ்கா காலத்தின் நான்காம் ஞாயிறு தினத்தை திருஅவை நல்லாயன் ஞாயிறு என்று கொண்டாடி வருகிறது.

நல்லாயன் என இயேசு தம்மைக் குறிப்பிடும் போது, மந்தையாகிய நம் மீது அவர் வைத்திருக்கும் பரிவையும் இரக்கத்தையும் அன்பையும் காட்டுகிறது. நல்லதொரு மேய்ப்பன் தமது ஆடுகள் மீது வைத்திருக்கும் உறவைப் போன்று, நமதாண்டவர் நம்மீது உறவு வைத்திருக் கிறார் என்பது புரியும். ஆனால் மற்றொரு கோணத்தில் நாம் சிந்தித்துப் பார்த்தால், நல்லாயன் என்பது இயேசு கிறிஸ்துவின் தலைமைத்துவப் பண்புகளை எடுத்துக் காட்டுவதை நாம் கண்கூடாக பார்க்கலாம். நல்லாயன் தமது மந்தையைக் காப்பார். பசும்புல் மேய்ச்சலுக்கு அவற்றை ஓட்டிச் செல்வார். காணாமற்போன ஆட்டை தேடுவார். தமது மந்தைக்காக உயிரையும் கொடுக்க அவர் தயங்க மாட்டார் (யோவான்10:12-15).

இயேசுவின் மந்தையைச் சார்ந்தவர்கள் நாம் என்பதில் பெருமிதம் கொள்கிறோம். இயேசுவின் மேய்ப்புப்பணி இன்றளவும் தொடரப்படுகிறது. அந்த பணியைத் திருஅவை பொறுப்புடன் நிறைவேற்றி வருகிறது என்றால் மிகையாகாது. இறைமகன் என்ற தகுதியை மறந்து, போற்றுவார் போற்றட்டும், தூற்றுவார் தூற்றட்டும் என்ற மனப்பான்மையோடு துவண்டுவிடாமல், நல்லாயன் இயேசுவோடு இணைந்து தொடர்ந்து பணியாற்றும் துறவறத்தாருக்காக, அவர்களின் அர்ப்பண வாழ்வு மேலும் சிறந்து விளங்க மன்றாடுவோம்.

முதல் வாசகத்தில் (திப.4:8-12), உடல் நலமற்றிருந்த பலருக்கும் நலமளித்த திருத்தூதரான பேதுருவையும் யோவானை யும் இஸ்ராயேல் குலக்குருக்களும் பரிசேயர்களும் சதுசேயர்களும் அச்சுறுத் துகின்றனர். உயிர்த்த இயேசுவைக் கண்ட பின்னர், அச்சமும் மடமையும் பறந்து, அருளும் அன்பும் நிறைந்த திருத்தூதர்கள் ஓங்கியக் குரலில் நற்செய்தியை அவர்கள் முன்னிலையில் வெளிப்படையாக அறிவிக்கின்றனர். இயேசுவின் பெயரால் முடவனை நடக்க வைத்த திருத்தூதர்களின் தலைவர் பேதுருவின் வழித்தோன்றல்களாக இருக்கும் நமது அருள்பணியாளர்களும், ஏன் நாம் அனைவரும் கடவுளின் மக்களாக இருப்பதே இதற்குக் காரணம் என இரண்டாம் வாசகம் (1யோவான்3:1-2) அறிவுறுத்துகின்றது. அதனால்தான் அவரது பேரன்பு என்றென்றும் நம்மோடு உள்ளது என இன்றையத் திருப்பாடல் (118) பறைசாற்றுகின்றது.

பரிவும் இரக்கமும் அன்பும் நிறைந்த நம் இறைவன், அனைத்து மக்கள் மீது அக்கறை காட்டுகிறார். எனவேதான், "இக்கொட்டிலைச் சேரா வேறு ஆடுகளும் எனக்கு உள்ளன. நான் அவற்றையும் நடத்திச் செல்ல வேண்டும்" (யோவான்10:16) எனக் கூறுகிறார்.

விண்ணக வாழ்வுக்கு நாம் மட்டும் தகுதி உடையவர்கள் என இறுமாப்புக் கொள்ள வேண்டாம். கத்தோலிக்கர்களாகிய நாம், அருள்சாதனங்களைப் பெற்ற மக்களாக இருக்கிறோம். ஆனால் நல்லாயனுக்குரிய பண்புகளை நம்மில் வளர்க்கிறோமா? குடும்பத் தலைவர்கள் எனும் வகையில் ஒரு நல்லாயனாக குடும்பத்தை வழிநடத்து கிறோமா? குடும்பத்திலுள்ள ஒவ்வொரு வரையும் அன்பு செய்து பாதுகாக்கிறோமா?

இன்று இறையழைத்தல் ஞாயிறுவைக் கொண்டாடும் வேளையில், "அறுவடை மிகுதி; வேலையாள்களோ குறைவு" (லூக்.10:2). எனும் இயேசுவின் அறிவுறுத்தலை மறக்க இயலாது. ஆகவே வாருங்கள், ஆண்டவரின் திராட்சைத் தோட்டத்தில் பல்வேறு பணிகளை அக்கறையோடும் பொறுப்போடும் மேற்கொள்ள நல்லாயனின் அருளை நாடுவோம். அதிகமான அருள்பணி யாளர்களும், இருபால் துறவறத்தாரும் நமது குடும்பங்களில், பங்குகளில் நம்மிடையே உருவாக வேண்டும் என்று இறைவேண்டல் செய்வோம்.

இறைப்பணிக்கான தன்னலமற்ற, அர்ப்பண உணர்வுமிக்க பணியாளர்களுக்குப் பற்றாக் குறை நம் நாட்டில் மட்டுமல்ல உலகெங்கும் நிலவுகிறது. ஒன்றுபட்ட இறைவேண்டல் இன்றியமையாதது. பெற்றோர்கள் மத்தியில் இறைப்பற்று இருந்தால் மட்டும் போதாது இறைப் பணிக்கான ஊழியர்களை உருவாக்குவதும், அர்ப்பணிப்பதும் முதன்மை கடமையாகும்.

திருஅவை ஓர் அன்பு சமூகம். இந்த அன்பு சமூகத்திலிருந்தே அருள்பணியாளர்கள், துறவறத்தார் தோன்ற முடியும் என்பதை கடவுள் இன்று நினைவூட்டுகிறர்.

*-அந்தோனி இன்னாசி, ஸ்ரீ கெம்பாஙான்.*

**பாஸ்கா காலம் 4-ஆம் ஞாயிறு**
திப: 4: 8-12
திபா: 118: 1,8-9. 21-23. 26,28,29
1 யோவான் 3: 1-2
யோவான்: 10: 11-18
**ஞாயிறு வாசகம்: ஆண்டு 2**
**வாரநாள் முதல் வாசகம்: I**
**திருப்புகழ் மாலை : வாரம் 4**